**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை - 6**

**ந.க.எண்.35593/சி2/இ2/2022, நாள் 30.06.2022**

பொருள் : பள்ளிக் கல்வி பதவி உயர்வு கலந்தாய்வு அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஊட்டுப் பதவிகளிலிருந்து பதவி உயர்வு கலந்தாய்வு கல்வி தகவலியல் மேலாண்மை முறைமை (EMIS) இணைய வாயிலாக நடத்துதல் தகவல் தெரிவித்தல் சார்பு.

பார்வை :
1) அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை நாள் 17.12.2021.
2) தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.42857/W1/S1/2022, நாள் 17.05.2022, 20.05.2022 மற்றும் 26.05.2022.
3) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரி (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.68209/சி1/இ1/2021, நாள் 24.12.2021 மற்றும் 17.02.2022.
4) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரி (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.62448/சி2/இ1/2021, நாள் 13.04.2022.

.....

பள்ளிக் கல்வித் துறையில் அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள தலைமை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு அதன் ஊட்டுப் பதவிகளிலிருந்து பதவி உயர்வு மூலம் நியமனம் செய்ய ஏதுவாக கீழ்க்கண்ட கால அட்டவணைப்படி பதவி உயர்வு கலந்தாய்வு கல்வி தகவலியல் மேலாண்மை முறைமை (EMIS) இணைய வழியாக நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | தேதி | பொருள் |
|---|---|---|
| 1. | 11.07.2022 | அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் (இறுதி பட்டியல்) EMIS வழியாக வெளியிடுதல். |
| 2. | 12.07.2022 | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு - பதவி உயர்வு கலந்தாய்வு. |
| 3 | 13.07.2022 | அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு - பதவி உயர்வு கலந்தாய்வு. |
| 4 | 14.07.2022 மற்றும் 15.07.2022 | இடைநிலை ஆசிரியர் / சிறப்பாசிரியர்களுக்கு - பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வு கலந்தாய்வு. |

த.பி.பா...

இவ்விவரத்தினை தங்களது நிர்வாக எல்லைக்குட்பட்ட அனைத்து அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும், பதவி உயர்வுக்கு தகுதியான அனைத்து ஆசிரியர்களும் அறிந்துகொள்ளும் வண்ணம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும், பதவி உயர்வு கலந்தாய்வினை கல்வி தகவலியல் மேலாண்மை முறைமை (EMIS) இணைய வழியாக(Online) நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்கும்படியும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி ஆணையருக்காக,

01.07.22.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் - இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி), சென்னை - 6